03.03.2026 O.S. 113/2018 பி.வா.சா 2 ஆரோக்கியசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கின் 1ம் பிரதிவாதி என் சகோதரி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் தகப்பனார் என்றால் சரிதான். என் அப்பா முதலில் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் எழுதிக்கொடுத்து பின்னர் பிழை திருத்தல் ஆவணம் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். பிழை திருத்தல் ஆவணத்தில் என்ன திருத்தம் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பாவிற்கும் தலா 68-1/2 செண்ட் பாத்தியப்பட்டதாக இருந்தது அதில் 10 செண்ட் இடம் கையிருப்பதாக இருந்ததை காட்டப்படாதால் பிழைதிருத்தல் ஆவணத்தில் 10 செண்ட் காட்டப்பட்டுள்ளது. முதல் ஆவணத்தில் 68-1/2 செண்ட் என காண்பிக்கப்பட்டு மீண்டும் 2வதாக உள்ள பிழை திருத்தல் ஆவணத்தில் 10 செண்ட் கையிருப்பாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 10 செண்ட்டிற்கு தனியாக எல்கை காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த சொத்திற்கு கீழ்பக்கம் மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவும், பெரியப்பாவும் பாகம் பிரிக்கும் போது ரோட்டிற்கு மேல்பக்கம் உள்ள சொத்தை கீழ்பகுதிஅளவு சரிபாதியாக பிரிக்கப்பட்டது என்றால் இல்லை. என் அப்பாவிற்கு வடபக்கம் 58-1/2 செண்ட் மட்டும் தான் அனுபவம் உள்ளது என்றும், கூடுதலாக பிழைதிருத்தல் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு மத்தியில் என் அப்பா இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவின் வாரிசு என்ற முறையில் என்னையும், மற்றவர்களும் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கிற்கு நாங்கள் அவசியமான கட்சி என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.